**ஆசிரியர் தேர்வு வாரியம்,**

**பத்திரிக்கைச் செய்தி**

ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை எண்.01/2026, நாள் 13.02.2026- இன்படி 2026 ஆம் ஆண்டிற்கான பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் - I 04.07.2026 அன்றும் தாள் - II 05.07.2026 அன்றும் நடைபெற்றது.

பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் I -இல் 59,534 தேர்வர்கள் தேர்வை எழுதினர். தாள் II -இல் 1,60,925 தேர்வர்கள் தேர்வை எழுதினர். தற்போது, தாள் I மற்றும் தாள் II க்கான உத்தேச விடைக்குறிப்புகள் மற்றும் விடைக்குறிப்புகள் மீதான ஆட்சேபணைகள் தெரிவிக்க Objection Tracker URL (https://trb1.ucanapply.com) ஆகியன ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் இன்று (15.07.2026) வெளியிடப்படுகிறது. உத்தேச விடைக்குறிப்புகளின் மீது ஆட்சேபணைகள் தெரிவிக்க விரும்பும் தேர்வர்கள் 15.07.2026 முதல் 22.07.2026 பிற்பகல் 5.30 மணி வரை ஆட்சேபணைகளை உரிய ஆதாரங்களுடன் தங்கள் Dash Board-இல் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

ஆட்சேபணைகள் தெரிவிக்கப்படும் விடைக்குறிப்புகளுக்கான உரிய சான்றாவணங்கள் இணைக்கப்படாத முறையீடுகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தபால், மின்னஞ்சல், குறுஞ்செய்தி மற்றும் பிறவழி முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது. அம்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும். அங்கீகரிக்கப்பட்ட பாடப்புத்தகங்கள் (Standard Text Books) அடிப்படையிலான ஆதாரங்களை மட்டுமே அளிக்க வேண்டும். கையேடுகள் (Guides, Notes) ஆதாரங்கள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனவே, தேர்வு எழுதிய தேர்வர்கள் தங்கள் Dashboard-ல் உத்தேச விடைக்குறிப்புகளை காணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாள்: 15.07.2026 தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்

Downloaded from AIJobAlert.com · Verify all details on the official website.